# யாழ்ப்பாண மாவட்டசபையில் 80 பேர் அங்கம் பெறுவர்?

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 இதழ் 107
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சௌ வைகாசி 15 ஸபர் 29 செவ்வாய்க்கிழமை (28-5-68)

### மசோதாவை மந்திரிகள் அங்கீகரித்தனர்

யாழ்ப்பாணம், செவ். மாவட்டசபை நகல் மசோதாவை மந்திரிசபை நுணுக்கமாகப் பரிசிலனை செய்து சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டுள்ளது. இம்மாதம் 24-ந் திகதி இரவு நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் மாவட்டசபை நகல் மசோதாவுக்கு மந்திரிகள் அங்கிகாரமளித்து விட்டதாக அறியப்படுகிறது.

மந்திரிசபை செய்துள்ள திருத்தங்களின் பின் இப்போதுள்ள நிலையின் படி மாவட்ட சபை மசோதா பாரிலிமென்டில் நிறைவேற்றப்பட்டு மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் யாழ்ப்பாண மாவட்ட சபையில் 86 அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கக் கூடியதாக இருக்குமென்று தெரியவருகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

# மாநகரசபை நிர்வாகம் மீண்டும் மக்களிடம் வரும்

## குடிநல-சுகாதாரவார விழாவில் அமைச்சர் திரு.

யாழ்ப்பாணம், செவ். "இலங்கையிலுள்ள மாநகரசபைகளில் சிறந்ததொன்றாக யாழ்ப்பாணம் மாநகர சபை இருக்கின்ற போதிலும் மக்களால் தெரியப்பட்ட அங்கத்தவர்கள் ஆட்சியில் சிக்கல் ஏற்பட்டதாலேயே இது கலைக்கப்பட்டு விசேஷ ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது, ஆனல் மீண்டும் விரைவில் மக்களி

[6-ம் பக்கம் பார்க்க]

## "'சங்கிலித்தோப்பு' கலைப்பொக்கிஷமாகும்"

### உள்ளூராட்சி அமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், செவ். 19-ம் நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் பிறந்திராவிட்டால் இன்று சைவமும் தமிழும் அழிந்து ஒழிந்திருக்குமென அமைச்சர் திருச்செல்வம் நேற்று தெரிவித்தார்

யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் நடந்த வைபவமொன்றில் அமைச்சர் திருச்செல்வம் மேலும் குறிப்பிட்டதாவது:-

தமிழ்ச் சரித்திரத்தில் யாழ்ப்பாணம் பெயர் பெற்றதாகும். 300 ஆண்டுகளாக தமிழ் மன்னர்களின் ஆட்சியின் போது எமது கலை, கலாச்சாரத்தை வளர்த்த நாம் அன்னியர் வருகையின் போதும் கலைப் போராட்டத்தை எமது ஆலயங்களில் நடத்தினேம்.

19-ம் நூற்றுண்டின் போது தமிழும், சைவமும் எமது கலாச்சாரமும் மங்கி இருந்த போது இதற்குப் புத்துணர்வளித்த பெருமை யாழ்ப்பாணத்தையேசாரும் ஆறுமுக நாவலர் இங்கு பிறந்து சைவத்தையும், தமிழையும் காத்ததோடல்லாமல், தென்னுட்டுக்கும் சென்று தமிழை வளர்த்தார். ஒரு மன்னனுக்கு வேண்டிய மரியாதை அன்று ஆறுமுகநாவலருக்கு அளிக்கப்பட்டது.

மாவட்டசபை அமைக்கப்பட்டதும் கலை-கலாசார-சரித்திரம் ஆகியனவற்றை வளர்க்கவும் அதற்கு சந்தர்ப்பமிட்டும் அப்போது 'சங்கிலி தோப்பு ஒரு புதிய கலைப்பொக்கிஷமாக' அமைப்புப்பெறும். [ஈ. நி]

## நேருசமாதாதான பரிசு பெறுகிறுர்



காலஞ்சென்ற நீக்ரோத் தலைவர்

புதுடில்லி, மே 27 நேரு சமாதான பரிசு இம்முறை காலஞ்சென்ற நீக்ரோத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அவர் மரண

(6ம் பக்கம் பார்க்க)

## "துப்புரவு ஒருவாரத்துக்கல்ல எந்தநாளும் அவசியம்"

யாழ்ப்பாணம், செவ் "வீட்டுத் துப்புரவுதான் நாட்டுத் துப்புரவாகும். எனவே எமது வீடுகளையும் வீதிகளையும் துப்புரவாக வைத்திருப்பதை இந்த வாரத்தில் மட்டும் செய்யாது தினமும் செய்ய வேண்டும்."

வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா நேற்று நடைபெற்ற குடிநல சுகாதாரவிழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வேணன் அபயசேகரா மேலும் பேசியதாவது:

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையால் இலங்கை அதிக வருமானத்தைப் பெறமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது இதற்கு முதலாவதாக நாம் எமது இடங்களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

கண்ட இடங்களில் வெற்றிலை துப்புவதை முதலாவதாக நாம் இன்று முதல் நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதனால் பல நோய்களும் கூட பரவ ஏதுவாக இருக்கின்றது.

மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் பேசுகையில் சிந்து நதிக்கரை நாகரிகம் எமது நாகரிகமெனப் பெருமை பேசும் தமிழினம் எமது தற்போதைய நிலையை நினைத்து வெட்கமும் துக்கமும்

[6-ம் பக்கம் பார்க்க]

### விளக்குமாறு பிடித்து

## அமைச்சர் கூட்டினர்

யாழ்ப்பாணம், செவ். நாவாந்துறை சோனக தெருப்பகுதிகளில் அமைச்சர் திருச்செல்வம் விளக்குமாறு பிடித்து வீதிகளைக் கூட்டி நேற்று குடிநல சுகாதார விழாவை ஆரம்பித்துவைத்தார்.

அமைச்சர் திருச்செல்வத்துடன் மாநகரசபை பதில் ஆணையாளர் திரு. வே. தங்கவேலு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் ஆகியோரும் வீதிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டனர்.

[ஈ. நி]

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் இன்றுகாலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தலைமையில் அரசாங்க செயலகத்தில் நடைபெறும்.

நாளைகாலை 9 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நடைபெறும்.

[ஈ. நி.]

# "மாவட்ட சபைக்கு ஒப்புக்கொண்டே தேசீய அரசாங்கம் உருவானது

## இப்பொழுது விவாதிக்க அழைப்பது ஏன்?"

### ஜி. ஜி. க்கு அமைச்சர் திருச்செல்வம் பதில்

யாழ்ப்பாணம். செவ். "மாவட்டசபை மசோதா பற்றி ஒரு மேடையில் விவாதிக்கவருமாறு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் என்னையும் தமிழரசுக் கட்சியினரையும் இன்று அழைப்பது ஒரு காலங்கடந்த செயலாகும். 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 24ந் தேதி தேசிய அரசாங்கம் அமைக்கும் போது திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் தேசிய அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களும் மாவட்டசபையை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டே தேசிய அரசாங்கம் அமைக்க ஒத்துழைப்புக்கொடுத்தனர் என்பதை இனியும் யாரும் மறுக்க முடியாது."

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபையால் நடாத்தப்படும் குடிநல சுகாதார வாரத்தை நேற்றுக் காலை, யாழ். மாநகரசபைக் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் திரு. திருச்செல்வம் மேலும் தெரிவித்ததாவது:

தனிப்பட்ட சுயேச்சை அபேட்சகர்கள் மேடையிலும், பாராளுமன்றத்திலும் எதையும் பேசிவிட்டுச் [illegible] ஆனல் நான் அப்படிப் பேசிவிட முடியாது. ஏனென்றால் நான் தமிழரசுக்கட்சியின் கொள்கைக்கும் கட்டுப்பாட்டுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவன் தேசிய அரசாங்கத்தின் மந்திரிசபையில் நான் அங்கத்துவம் வகிக்கின்றேன். மந்திரி சபையின் கூட்டு பொறுப்பு எனக்கும் உண்டு, அதற்கும்

[6-ம் பக்கம் பார்க்க]

## ஜி. சி. ஈ. முடிவு இன்று தெரியும்

யாழ்ப்பாணம், செவ். கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையின் பெறுபேறுகள் இன்று பரீட்சார்த்திகளிடம் வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று திங்கட்கிழமைசகல பரீட்சார்த்திகளுக்கும்பெறுபேறுகள் அனுப்பப்பட்டதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகமனைத்தும் ஒரு பெரிய சித்திரம். ஆசைகள் இல்லாதிருந்தாலே அதைக்கண்டு இன்புறலாம். எனது, எனது என்ற முட்டாள் தனம் ஒழியவேண்டும். ஆசைகளை விட்டால்தான் கடவுளின் இந்த உலகத்தை நன்கு சுவைக்கமுடியும்.

— சுவாமி விவேகானந்தா


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD Jaffna
Post Box: 40 Jaffna
Telephone 389

சௌமிய நாம ஸெளவருஷம் வைகாசி மாதம் 15-ந் திகதி
(28-5-68)


## இந்தியாவும் ஆஸ்திரேலியாவும்

தென்கிழக்காசியாவில் அமைதியும் சுபீட்சமும் நிலவுவதற்கு முழு இந்தியாவிலும் ஸ்திரத் தன்மையும் தன்னம்பிக்கையும் நிலவவேண்டும் எனவும் இதேபோல் தென்கிழக்காசியாவின் ஸ்திரத்தன்மையும் சுபீட்சமும் இந்தியாவின் அமைதியையும் சுபீட்சத்தையும் வலுப்படுத்தும் என்றும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆஸ்திரேலியாவில் கூறியிருக்கும் கருத்து ஆஸ்திரேலியத் தலைவர்களினதும் தென்கிழக்காசிய நாடுகளின் தலைவர்களினதும் சிந்தனையைத் தூண்ட உதவவேண்டும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய ஜனநாயகநாடாக விளங்கும் இந்தியாவின் பிரதம மந்திரியொருவர் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருப்பது இதுதான் முதல் தடவை. ஆஸ்திரேலியாவும் ஜனநாயக வாழ்க்கை முறையைப் பின்பற்றும் ஒரு நாடு. இந்தியா, இலங்கை அங்கம் வகிக்கும் காமன்வெல்த்திலும் அது அங்கம் வகிக்கிறது. இந்தியா போன்று இரண்டரை மடங்கு நிலப்பரப்பைக் கொண்ட நாடு அது. இந்தியாவின் ஜனத்தொகை சுமார் ஐம்பத்தொரு கோடி, ஆஸ்திரேலியாவின் ஜனத்தொகையோ ஒரு கோடியே பதினேழு லட்சம்தான். ஆஸ்திரேலியாவில் நீர்வளம், நிலவளம் நிறைய உண்டு. விவசாயம் கைத்தொழில் விருத்திக்கு அங்கு வாய்ப்பதிகம். ஆயினும் ஆஸ்திரேலியாவும் நிறவேற்றுமையை ஓரளவு கடைப்பிடித்துவருவதால் அங்கு இந்தியர்களோ இதர ஆசிய நாட்டவர்களோ குடியேற முடியாமலுள்ளது. இந்தியாவிலும் மற்றும் ஆசிய நாடுகள் பலவற்றிலும் பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்பஅந்தந்தநாடுகளின் நிலப்பரப்பும் விவசாயக் கைத்தொழில் வாய்ப்பும் பெருகவில்லை ஆசிய நாடுகள் பலவற்றிலும் முன்னரே குடியேறி வர்த்தகத்திலும் தொழில்களிலும் ஈடுபட்டிருந்த இந்தியர்களும் கூட, அந்தந்த நாட்டு தேசிய இனத்தவரின் தேவையை முன்னிட்டு அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியா தனது கொள்கையைத் தளர்த்தினால், ஆசியாவின் ஜனத்தொகை பொருளாதாரப் பிரச்னை தீருவதுடன் ஆஸ்திரேலியாவின் சுபீட்சமும்பாதுகாப்பும் பலப்படுத்துவதாகும். ஆஸ்திரேலியாவில் குடியேறி அந்நாட்டுக்கும் ஆசியாவின் பொருளாதார சுபீட்சத்துக்கும் வழிகாட்ட வாய்ப்பேற்படும்.

இந்தியாவில் ஜனநாயகம் வெற்றி பெறுவதில்தான் ஆசியாவில் ஜனநாயகத்தின் வெற்றியும் பெரும்பாலும் தங்கியிருக்கிறது. இந்தியப் பிரதமர் கூறியிருப்பதுபோல இந்தியாவின் அமைதியும் சுபீட்சமும் தென்கிழக்காசியாவின் அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் வழிகாட்டும். அதேபோல் ஆசியாவின் ஸ்திரத்தன்மையும் சுபீட்சமும், அமைதியும் இந்தியாவுக்கும் வலிமை தரும். இந்தியாவின் அமைதியும் சுபீட்சமும் இலங்கையின் அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் பாதுகாப்புக்கும் வழிவகுக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இந்தியப் பிரதமர் ஆஸ்திரேலியாவில் தெரிவித்துள்ள கருத்தை இலங்கையும் தொடர்ந்து வற்புறுத்தி வந்தால் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின்மனப்பான்மையில் மாறுதல் ஏற்படாமல்போகாது. நமக்கும் அது நன்மை தராமலிருக்கமுடியாது.

# இன்றைய உலகின் அவல நிலையை நீக்க வழிஎன்ன?

## சைவப் பேரவைதரும் கருத்துக்கள்

— க. பத்மநாதன் —
(இறம்பைக்குளம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள ஓமந்தையைச் சார்ந்த இறம்பைக் குளம் எனும் சிற்றூரில், கீலக ஆண்டு சித்திரைத் திங்கள் 21ஆம் நாள் (3-5-68) சைவ மக்கள் சிலர் இன்றைய உலகின் அவல நிலையை உற்றுணர்ந்து இதற்குச் சைவம் ஆற்ற வேண்டிய பணியிருப்பின் அதை ஆற்றும் நோக்குடன் கூடினர். சைவ சமய மறுமலர்ச்சியை நடைமுறையில் கொண்டுவரத்தக்க கருத்துக்கள் பல அவ்வேளை தரப்பட்டன. அவற்றை இதன் கீழ் தருவாம்.

### அரசியல்வல்லுநரின் கருத்து

''உயரிய வாழ்க்கைத்தரம் எனும் குறிக்கோளில் ஆட்சிவயப் பட்டவர்களாக மக்கள் இன்று தினம் 8 மணி நேரமும், வாரத்துக்கு ஐந்தரை நாட்களும் தமது முன்னோர்கள் அறிந்திராத முறையில் கடினமான தொழிலில் கட்டுப்பாடுகட்கு உட்பட்டு அயராது உழைக்கிறார்கள். ஆயினும் அந்த உயரிய வாழ்க்கைத் தரத்தை அடைவது கடினமாக இருப்பதறிந்து கலங்குகின்றார்கள். மனிதர்கள் மிகமிகப் பேராசையுடையவர்களாக உள்ளனர். தமது பேராசையை 'உயர்தர வாழ்வு' என்னும் பொது முறையான தலைப்பில் பெருமைப்படுத்துகின்றனர். இந்தப் பேராசையானது இக்காலத்தில எல்லாப் பெரிய உள்நாட்டு வெளிநாட்டு அரசியற் சிக்கல்களுக்கும் பெரும்பாலும் அடிப்படையாக இருக்கின்றது'' என்கிறார் தற்கால அரசாங்க முறை ஆராய்ச்சி வல்லுனராகிய ஹேர்மன் பைனர். இச்சூழ்நிலையில் வள்ளுவன் திருவாய்மொழி நினைவு கூரத்தக்கது. ''நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின், உயிர்க்கு இறுதியாகிவிடும்.'' இது அரசியற் பகுதியில் 47ஆம் அதிகாரத்தில் 6ஆம் குறட்பாவாக அமைந்துள்ளது. இதன் பெருமை நோக்கிலே வள்ளுவரும் இக்குறளை அதிகாரத்தின் நடுவே அமைத்துள்ளார் போலும்.

இன்றைய நிலையில் இவ்விரு பெரியார் கருத்துக்களும் ஒருவாறு பொருந்துவது காணலாம். மக்கள் அளவு கடந்த பேராசையால் உந்தப்படுவார்களாயின் மக்கள் குலத்துக்கே இறுதி நேரிடலாம்.

### விஞ்ஞானம் தரும் விளைவு

''விஞ்ஞான வளர்ச்சி மிகுந்த சிற்சில நாடுகளில் சமய வாழ்வின் அவசியம் பேசுமளவு போற்றப்படவில்லை. மேன்மேல் தேவைகளைப் பெருக்கிக்கொள்வதும் அதற்காகப் பரபரப்புடன் மேன்மேற் பொருளைத் தேடுவதும் இம்முயற்சியில் வெற்றியடைதற்கு அவசியம் எனத் தோன்றும்போது மெலிந்தவர்களிடம் அறநெறி திறம்பிநடத்தலும் அங்கே காணப்படுகின்றன. வேகம், வெறி, நாசம் என்பன நவநாகரீகத்தின் பண்புகளாயுள்ளன'' என மேனாட்டு ஆசிரியர் ஒருவர் எழுதியுள்ளார். விஞ்ஞானம் முன்னேற முன்னேற உலகம் அழிவுப்பாதையில் சென்றுகொண்டிருப்பதைக் கண்டு கலங்காத மக்கள் யாருமில்லை.

### சில சொற்றொடர்கள் தரும் மயக்கம்

இச்சூழ்நிலையில் நாம் உலகிற்கு ஈயக்கூடியது ஒன்றே. அதாவது சிந்தனை; தெளிவு. பண்டைக்காலத்தில் கூறப்படும் மந்திரச் சொற்கள் போலே இன்றும் சில சொற்கள் உள. சுதந்திரம், சமத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கைத்தர உயர்வு, முன்னேற்றம், நாகரிகம் இன்னோரன்ன சொற்களைக் கேட்ட மாத்திரத்திலேயே பொது மக்கள் மயங்கிச் செயலற்று பணிந்து அடிமைகளாவதைப் பல கூட்டங்களிற் காணலாம். இச்சொற்களைச் சொல்லுபவர்களையே தெய்வங்களாகக் கருதிச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வாரும் உளர். ஆனால் இச்சொற்கள் எக்கருத்தைத் தம் மனதுக்குக் கொடுக்கின்றன என்பதும் அதைச் சொல்பவர்கள் எது கருதிச் சொல்கிறார்கள் என்பதும் மக்களறியார். இத்தகைய மயக்கத்தில் எழும்மூடநம்பிக்கைகளுக்குப் பலியாகி இச்சொற்றொடர்களைப் பிரயோகம் செய்யும்பொழுதே அவசமுற்று ஆவேசப்பட்டு வெறியர்கள்போல இன்று மக்கள் நாசங்கள் செய்வதைக் கண்கூடாய்க் காணலாம்.

### நாகரிகம் என்பது யாது?

எங்கள் உடற் தோற்றத்தை விநோத முறைகளில் அலங்கரித்து மாற்றிக் காட்டுவதா அல்லது எங்கள் உள்ளம் பண்படுத்தப்பட்டு அதிலிருந்து பிறக்கும் உயரிய நோக்கங்களைக் கொண்டு செயற்படுவதா நாகரிகம்?

பிறநாட்டுப் படங்களில் வரும் அலங்கோலச் சிலைகளைப் பலகாரங்களும் ஆபாச ஆடைகளும் அணிவதே நாகரிகமானால், கொலை நடத்தல், கற்பழிப்பு, காமம் போன்ற ஆபாசச் செய்திகள் நிறைந்த பத்திரிகைகளையும் பிரசுரங்களையும் கையில் வைத்திருத்தலும் வாசித்தலும் அவற்றையே சிந்தித்தலும் நாகரிகமானால் பெற்றோரைப் பேணாது பெரியோரைத் துணைக்கொள்ளாது சுக்கான் இல்லாத மரக்கலம்போலத் திக்கற்று அலைவது நாகரிகமானால், குடிவெறியில் அமிழ்ந்து ஒழுக்கம் இழந்து உலகை இகழ்ந்து நடப்பதே நாகரிகமானால், மேலதிக தேவையும் நித்திய தரித்திரமும் வேகமும் மோகமும் மேற்கொண்டு மனிதன் தன்னைத்தான் கொல்வது நாகரிகமானால், இவற்றிலிருந்து இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக! சிற்றினம் சேராமை, புலனடக்கம், தெய்வம் பேணல் ஆகியவை அநாகரிகமாயின் இவற்றை மறுக்கும் நாகரிகத்திலின்றும் இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக!

மனிதனை உட்பகுதியில் இருந்து மாற்றியமைப்பதன் மூலமே அமைதி நிலைநாட்டப்பெறுதல் வேண்டும் என் 'மனிதனின் வாழ்' எனும் நூலின் ஆசிரியர் கூறியிருப்பது யாவரும் ஊன்றி உணரத்தக்க உண்மை வாசகமாகும்.

(நாளை முடியும்)

## இன்றைய பலன்

[28 - 5 - 68]

வைகாசி மீ 15 உ.

செவ்வாய்க்கிழமை

திதி- பிரதமை பகல் 3-03 மேல் துதிகை.

நட்சத்திரம்- ரோகிணி பகல் 10-17 மேல் மிருகசீரிடம்

ராகுகாலம் - 2-52—4-22.

சுபநேரம் - 10-22—11-52.

இன்று பிறந்தவர்களுக்கு- குங்குமப் பொட்டுப் போல், கோமட மஞ்சள் போல் இப்பிறந்த ஆண்டு பெண்களுக்குசிறப்பையும் புகழையும் தேடித்தரும். ஆண்களுக்கும் தொழில் துறையில் முன்னேற்றங்கள் உண்டு, பெரியோர்கள் ஆசியும், பெற்றோர்கள் மதிப்பும் தாராளமாகக் கிடைக்கும். பொருள் வரவிலும் புதுப் பாதை திறக்கும்.

மேஷம்- கழுகுப் பார்வை, கடமையில் கண்ணை

ரிஷபம்-ஆசை அலைகள் அவப்பெயர் உண்டு

மிதுனம்- வாக்கில் மேம்பாடு, வசதிகள் பெருகும்

கடகம்-மோசடி நடக்கும் விழிப்புடன் இரு

சிம்மம்-திடீர் வரவு, திகைக்க வைக்கும் உறவு

கன்னி-புத்திர சுகம், புதிய பாதை

துலாம்- துன்பத்தின் நிழலாட்டம், துயர்படிந்த நாள்

விருச்சிகம்- குடும்ப மகிழ்ச்சி, குழந்தைச் செல்வம்

தனுசு- வீண் செலவு, உறவினர் தொல்லை

மகரம்- தம்பிக்கை நலன் தரும், முன்னேற்றமுமுண்டு

கும்பம். வாழ்வு சிறக்கும், பெரியோர் ஆசி

மீனம்- எதிர்பார்த்தது கிடைக்கும், இன்று சுப நாள்

— சோதிடக்கலாநிதி —

## ஐயாறன் எழுதுவது

பெட்டியில் கொஞ்சம் பணமிருந்தது. காணவில்லை. யார்மீதோ சந்தேகம். ஆனால் கேட்கப்படுமா! கேட்டாலும் கிடைக்குமா?

எல்லாம்இறைவன் செயல் என்றால் ஏன் இந்தப்பணம் காணாமற்போயிற்று, என்ன தவறு செய்தோம் என்று சற்றே ஆத்ம சோதனை செய்துகொண்டேன். காரணம் புரிந்தது.

இரு குழந்தைகள் வந்து சிறு பண உதவி கேட்டன. நான்கு நாட்களுக்குமுன் தான் கொடுத்தேன். அதனால் பணமில்லை என்று கூறி, இனிப்பு வாங்கிச் சாப்பிட சில்லறை கொடுத்து அக்குழந்தைகளை அனுப்பிவிட்டேன். அப்போது ஏதோ தவறு செய்வதாக மனம் வேதனைப்பட்டது. என்றாலும் எப்படியோ மனதைச் சமாதானம் செய்துகொண்டேன்.

இரண்டு நாள் கழித்து பெட்டியில் பார்க்கையில், அக்குழந்தைகள் கேட்டதைவிட அதிகமான பணம் காணவில்லை. குழந்தைகள் கேட்டதை கொடுத்திருந்தால், இந்தத் திருட்டு ஏற்பட்டிருக்குமா? பணத்தை வைத்துக்கொண்டு இல்லை என்று சொன்னால் அதற்கு தண்டனை அனுபவிக்கத்தானே வேண்டும்?

இதற்கு என்ன பரிகாரம்? அக்குழந்தைகளின் வீடு தேடிச்சென்று கேட்ட பணத்துடன் இரண்டொன்று அதிகமாகக் கொடுத்துவிட வேண்டுமென்று மனம் கூறுகிறது. அப்படிச் செய்யாவிடில் மனம் ஆறுதல் அடையாது போலுள்ளது. ஊருக்கு உபதேசிக்கிறேன். ஆனால் தினம் தினம் எவ்வளவு தவறுகள் செய்கிறேன்! வாழ்க்கையிலே தினசரி புதுபுது பாடங்கள் கற்றுக்கொள்கிறோம். இந்த வாழ்க்கை திருந்திக்கொள்ளக்கூடிய ஒரு சீர்திருத்த பாடசாலை போலுள்ளதல்லவா?

ஃ ஃ ஃ

சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள் அடுத்த மாதம் 12-ந் திகதி இங்கு வருவதாகவும், ஒரு மாதம் தங்கியிருந்து இலங்கையில் பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வாரென்றும், யாழ்ப்பாண முனிஸிபல் இன்ஜினியர் வைத்திலிங்கம் அவர்கள் தெரிவிக்கிறார்

திரு. வைத்திலிங்கம் சமீபத்தில் பம்பாய்சென்று அங்கு சத்ய சாயிபாபாவின் தலைமையில் நடைபெற்ற உலக மகாநாட்டில் கலந்துகொண்டுவந்து தமது பல அனுபவங்களையும் தெரிவித்தார். சுமார் 1300 பிரதிநிதிகள் பல நாடுகளிலிருந்தும் அம்மகாநாட்டுக்கு வந்திருந்ததாயும் இலங்கையிலிருந்து சிலர் சென்றதாயும், எல்லா ஏற்பாடுகளும் மிகமேலானமுறை

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் அமைதி நிலைநாட்டத் தீவிர முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன

## 'மாணவர் இயக்கத்தை அரசாங்கம் இரக்கமின்றி அடக்கப்பார்க்கிறது'

### 6 பேராசிரியர்கள் குற்றச்சாட்டு

பாரிஸ், மே 27

பிரான்ஸில், இப்போது ஓரளவு அமைதி நிலவுகிறது. கடந்த சில தினங்களாக அமைதியிழந்து அல்லற்படும் பிரெஞ்சு தொழிற்துறையில் மீண்டும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுமுகமாக அரசாங்கமும், தொழிற்துறை அதிபர்கள், தொழிலாளர்கள் சங்கங்களும் தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகின்றன.

பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடு, நேற்றிரவும் தொழில் அதிபர்களுடனும் தொழிற் சங்கத் தலைவர்களுடனும் தமது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தினார். இப்பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படும் ஆலோசனைகள், நாட்டின் தொழிற்துறை சம்பந்தமாக மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

**தொழில் அதிபர்கள் இணக்கம்**

தொழிலாளர்களின் ஊதியங்களை ஓரளவு உயர்த்துவதற்குத் தொழில் அதிபர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களுக்கு மேலும் பல சலுகைகளைத் தொழில் அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கத் தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

**மாணவர் ஆர்ப்பாட்டம்**

மாணவர்கள் மேலும் ஆர்ப்பாட்டங்களை இன்று நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களில் சேர்ந்து கொள்ள வேண்டாமென்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி, தனது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

**பேராசிரியர்கள் குற்றச்சாட்டு**

மாணவர்கள் இயக்கத்தைப் பிரெஞ்சு அரசாங்கம் ஈவிரக்கமின்றி முறியடிக்க முயல்வதாக ஆறு பிரபல பேராசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவர்களில் இருவர், நோபல் பரிசு பெற்றவர்களாவர். இவ்விதம் அரசாங்கம் மாணவர்களை நடத்துவது, இரத்தக்களரிக்கே வழிவகுக்குமென அவர்கள் எச்சரித்துள்ளனர்.



## நேரு நினைவு தினம்

புதுடில்லி, மே 27

புதுடில்லியில், ஜமுனை ஆற்றுக்கரையிலுள்ள சாந்தி பவனத்தில், மறைந்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்.

அங்கு முதலில் வந்து கூடிய மக்களில், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின், மத்திய மந்திரிகள் எம். பிக்கள், ராஜதந்திரப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இதற்கிடையில் நேரு நினைவு ஸ்தாபனம், அறுவருக்கு 'பெலோஷிப்' விருதுகள் வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. கல்வி, ஆராய்ச்சி, மற்றும் துறைகளில் சிறந்தபணி ஆற்றுவோருக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. திருவாளர்கள் என் கிருஷ்ணன், ராமச்சந்திரன், சிவராமமூர்த்தி ஆகிய மூன்று தமிழர்கள் இவ்வருவகில் இடம்பெறுகின்றனர்.

இவ்விருதுகள், மாதம் ஒன்றுக்கு ரூபா 3000 அளிக்கின்றன.

## லண்டன் ஆர்ப்பாட்டத்தில் இருபது பேர் கைது

லண்டன், மே 27

பிரான்ஸில் நடைபெறும் மாணவர், தொழிலாளர் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு தெரிக்கு முகமாக நேற்று லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், இருபது பேர் கைதாகினர்.

லண்டனிலுள்ள பிரெஞ்சு தூதரகத்துக்கு முன்னால், ஆர்ப்பாட்டக்காரர்களிடையே மோதல் ஏற்பட்டது. இரண்டு இடதுசாரிக் கோஷ்டிகளே இவ்விதம் மோதிக் கொண்டன. இந்த மோதலின் போது பலர் காயமுற்றனர்.

## 'ஆசிய சமாதானத்துக்கு நிலையான இந்தியா அவசியம்'

### ஆஸ்திரேலியாவில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா

ஸிட்னி, மே-27

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது ஆஸ்ரேலிய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நியூசிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் ஆஸ்திரேலியாவை விட்டுச் செல்ல முன்னர் ரேடியோவுக்கு அளித்த பேட்டியொன்றில் தென் கிழக்காசியாவின் அமைதி, பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒன்றிணைந்து ஆற்றக் கூடிய பணி அதிகம் என்று குறிப்பிட்டிருந்தார்.

**இணைப்பு முயற்சிகள்**

ஆஸ்திரேலியத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாக அமைந்ததாகவும் இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக அபிவிருத்திக்குப் பரந்த அளவில் இடமிருப்பதாகவும் இணைப்பு முயற்சிகளில் ஈடுபட அதிக அளவில் சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

**பத்திரிகை கருத்து**

ஆஸ்திரேலியாவின் பிரபல தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றான 'ஸிட்னி டெயிலி டெலிகிறுப்' இந்தியப் பிரதமரின் ஆஸ்திரேலிய விஜயம் மற்றி தலையங்கம் எழுதுகையில் நிலையான அபிவிருத்தியடைந்த ஓர் இந்தியா, ஆசிய அமைதிக்குப் பெரும் சக்தியாக விளங்கும் என்ற திருமதி இந்திராகாந்தியின் கூற்றை ஒவ்வொரு ஆஸ்திரேலியனும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வானென்று குறிப்பிட்டிருக்கிறது.

## தென் வியட்னாமில் மீண்டும் கடும் சண்டை

### 500 வியட் கொங்கியர் கொல்லப்பட்டனர்

சைகோன், மே 27

தென் வியட்னாம் தலைநகரான சைகோனுக்கருகே, நேற்றுத் தென் வியட்னாம் துருப்புகளுக்கும் வட வியட்னாம், வியட்கொங் துருப்புகளுக்குமிடையே சண்டை நடைபெற்றது. இரு வாரங்களுக்கு முன் வட வியட்னாமியர் சைகோன் மீது நடத்திய பெரிய தாக்குதலுக்குப் பின், அப்பகுதியில் தாக்குதல் நடைபெறுவது இதுவே முதற் தடவையாகும்.

இச்சண்டையில், தென் வியட்னாம் துருப்புகளுக்கு உதவியாக அமெரிக்க ஹெலிகொப்டர் விமானங்களும், மாலுமித் துருப்புகளும் பங்குபற்றின.

போர் விலக்குப் பிராந்தியத்துக்குத் தெற்கே நடைபெற்ற மற்றுமொரு கடும் சண்டையில் 500 வியட் கொங்கியரை தாம் கொன்றுள்ளதாக அமெரிக்கத் துருப்புகள் அறிவித்துள்ளன.

## சமஷ்டி நைஜீரிய - பியாவ்ரா பேச்சுவார்த்தைகளில் நெருக்கடி

### சமஷ்டிப் பிரதிநிதி ஒருவரைக் காணவில்லை

கம்பாலா, மே 27

உகாண்டாத் தலைநகரான காம்பாலாவில், சமஷ்டி நைஜீரிய, 'பியாவ்ரா'ப் பிரதிநிதிகளிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நெருக்கடி ஒன்று தோன்றியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு நைஜீரியாவான பிரிவினை 'பியாவ்ரா'ப் பிரதிநிதிகள் கோஷ்டி, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காரியதரிசியான திரு. ஆர்னோல்ட் ஸ்மித்திடம், தாம் உடனடியாகவே தாயகம் திரும்பப் போவதாகத் தெரிவித்தனர். ஆனால், அவர்களை அவ்விதம் செல்லாது, தொடர்ந்து காம்பாலாவில் நிற்குமாறு திரு. ஸ்மித் வேண்டிக்கொண்டார்.

பேச்சுவார்த்தைகள் நெருக்கடி நிலையை அடைவதற்குக் காரணம், கிழக்கு நைஜீரியப் பிரதிநிதிகள் கோஷ்டி, சமஷ்டி நைஜீரியப் பிரதிநிதிகளிடம், சமஷ்டியை விட்டுப் பிரியும் கொள்கையை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொண்டதேயாகுமெனக் கூறப்படுகிறது.

**ஒருவரைக் காணவில்லை**

இது இவ்வாறிருக்க, பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கெனக் காம்பாலா வந்து சேர்ந்த சமஷ்டி நைஜீரியப் பிரதிநிதிகள் கோஷ்டியைச் சேர்ந்த அந்தரங்கக் காரியதரிசி ஒருவர் காணாமற்போய் விட்டதையடுத்து, அக் கோஷ்டித் தலைவர், உகாண்டா அரசாங்கத்திடமிருந்து விளக்கம் கோரியுள்ளார். விளக்கம் கிடைக்கும் வரை, பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு தமக்குத் தமது தலைநகரான லாகோஸிலிருந்து உத்தரவு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

காம்பாலாவில் நடைபெறும் நைஜீரிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில், அந்நாட்டில் பலத்த இரத்தக்களரி ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

இஸ்ரேல் கைவசமுள்ள

## காஸாப் பகுதியில் ஐந்து பள்ளிமாணவிகள் சுடப்பட்டனர்

டெல்அவிவ், மே. 27

இஸ்ரேலியப் படைகள், கடந்த ஜூன்மாதம் நடைபெற்ற அரபு — இஸ்ரேலியப்போரில் கைப்பற்றிய காஸாப்பகுதியில், நேற்று நடைபெற்ற அரபு ஆர்ப்பாட்டங்களின்போது, 5 அரபு மாணவிகள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்குள்ளாகினர்.

ஆர்ப்பாட்டங்களின்போது, தெருக்களில் சென்றுகொண்டிருந்த கார்கள்மீது, அரபுப்பள்ளிமாணவிகள் பெரிய கற்களை வீசியதாகவும், அப்போது ஒரு கார்க்காரர் அவர்கள் மீது சுட்டதன் விளைவாக 5மாணவிகள் மெல்லிய காயங்களுக்குள்ளானதாகவும் இஸ்ரேல் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

ஆர்ப்பாட்டம் செய்த அரபு இளைஞர் பலரை இஸ்ரேல் துருப்புகள் கைதுசெய்ததாகவும் அவை மேலும் தெரிவித்தன

### பழைய ஜெருசலத்தில் இஸ்ரேலியர் கொண்டாட்டம்

இதற்கிடையில், கடந்த ஜூன்மாதப்போரில், இஸ்ரேலின் பெரும் வெற்றியொன்றை இஸ்ரேல் மக்கள் நேற்று வெகு விமரிசையாகக் கொண்டாடினர்.

பழைய ஜெருசல நகர்மீது இஸ்ரேல் கூட்டிய வெற்றியே, இவ்வாறு கொண்டாடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் அந்நகரிலுள்ள 'அழும் சுவரை'ச் சுற்றிக் கூடி நின்றனர். அவர்களிடையே பேசிய இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல், ஜெருசலத்தை ஓர் ஒன்றுபட்ட நகராக வைத்திருக்க, இஸ்ரேல் உறுதிகொண்டிருப்பதாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டசபை பற்றி சிங்களப்பத்திரிகைகள்

(மாவட்ட சபை பற்றி சிங்கள தினசரி பத்திரிகைகள் தமது தலையங்கங்களில் தெரிவித்துள்ள அபிப்பிராயங்கள் சில):

## 'ஜனதின' கூறுகிறது

கொழும்பு, திங்கள்

சரியான வழியில் பிரதமர் தனது அதிகாரத்தை பாதுகாக்க முடியாவிடில், பாராளுமன்றத்தை கலைத்து மக்கள், தங்கள் விருப்பப்படி தீர்ப்பளிக்க விடுவதுதான் பிரதமரின் கடமையாகும்.

சிங்கள தினசரியான 'ஜனதின'வின் 23-ம் திகதி தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: சமஷ்டிக் கட்சியினருக்குத்தான் மாவட்டசபை தேவைப்படுகிறது. பிரதமர் மாவட்ட சபைமசோதாவை கொண்டுவர முயற்சிப்பது நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்ட அக்கறையினாலல்ல. சமஷ்டி கட்சியினரின் ஆதரவை பெறுவதற்கும், தனது அதிகாரத்தை பாதுகாப்பதற்கும் தான்.

## "ஒருவருக்குச் சொந்தமானதல்ல" 'தவஸ' சொல்கிறது

கொழும்பு, திங்கள்

மாவட்டசபை மசோதா தனி ஒருவருக்குச் சொந்தமான பிரச்னையல்ல. இந்நாட்டில் வாழும் லட்சக்கணக்கான மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையாகும் என்பதைப் பிரதமர் சிந்திக்கவேண்டும்.

சிங்களத் தினசரியான 'தவஸ'வின் 22ந் தேதி இதழில் வெளிவந்த தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: பிரதமர் சமஷ்டிக்கட்சியினருக்கு விசேஷ வாக்குறுதியைக் கொடுத்திருந்தால், அது மக்களைக் கலந்தாலோசித்தபின் கொடுக்கப்பட்ட வாக்குறுதியல்ல; மக்கள் ஆதரவுடன் கொடுத்த வாக்குறுதியுமல்ல.

## "எல்லோரையும் பாதிக்கும்" என்கிறது 'சிறிலங்கா'

கொழும்பு, திங்கள்

மாவட்டசபை மசோதா இந்நாட்டிலுள்ள எல்லோரையும் பாதிக்கக்கூடியது. பின் எதற்காக நீண்டநேரம் இரகசியமாக இம்மசோதா விவாதிக்கப்படுகிறது.

சிங்களத் தினசரியான 'சிறிலங்கா'வின் 22ந் தேதி இதழின் தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பிரதமரும் அவரது கட்சியினரும் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி அதிகம் பேசுகின்றனர். அப்படியானால் மாவட்டசபை விஷயத்தில் மக்களையும், பத்திரிகைகளையும் ஏன் மறந்துவிட்டனர்? இனிமேலும் மாவட்டசபை மசோதாவை இரகசியமாக வைத்திருப்பது புத்தியல்ல. தாமதிப்பது பாதகமான முடிவுகளைக் கொண்டுவரும்.

## 'எதிர்க்க வேண்டும்' 'சிங்களே' சொல்லுகிறது

கொழும்பு, திங்கள்

நாட்டில் பற்றுள்ள எல்லா மக்களும் மாவட்டசபை மசோதாவை எதிர்க்க வேண்டும். இம் மசோதாவினால் நாடு பிளவுபட்டுவிடும் என்பதற்காகவே எதிர்க்கும்படி கேட்கிறோம்.

சிங்கள தினசரியான 'சிங்களே' 19-ம் தேதி இதழில் வெளிவந்த தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

## 'பெரும் நெருக்கடி' என்கிறது 'தினமின'

கொழும்பு, திங்கள்

பதவிக்குவந்தபின் பிரதமர் எதிர்நோக்கவேண்டியுள்ள பெரும் நெருக்கடி, மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவருவது தான்.

சிங்கள தினசரியான 'தினமின, 22-ம் திகதி தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இது எதிர்க்கட்சியினர் லாபமடையும் பெரும் அரசியல் பிரச்னையாகும். உள்ளூராட்சி மன்றங்கள் மகாசங்கம், பொதுமக்கள் இம் மசோதாவை எதிர்க்கின்றனர். 60-ம் ஆண்டு பிரதேச சபைமசோதாவை அன்றைய எதிர்க்கட்சியான யு. என். பி. பலமாக எதிர்த்ததென்பதை மக்கள் மறந்துவிடவில்லை. மாவட்டசபை முறை சமஷ்டி ஆட்சிக்கு வழிவகுப்பதென்பது அவர்களுக்கு நன்கு தெரிந்தவிஷயமாகும்.

# 'சுயமொழிப் போதனையே அறிவை வளர்க்கும்'

உடுவில், திங்கள்

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு ஆங்கிலம் படித்தவர்களையே அறிவுடையோர் என நம்பியிருந்தனர். 'ஆங்கிலக்கல்விதான் கல்வி' என்ற நிலை அன்றிருந்தது. ஆனால் இன்று அது தவறென உணரப்பட்டது. சுயமொழிப் போதனைகளும், விஞ்ஞான தொழில்நுட்ப, விளையாட்டுக் கல்விகளும் மனித அறிவை வளர்க்கும் திறமை வாய்ந்தன என்பதைத்தெரிந்துகொண்டு அதனை ஊக்குவிக்கும் முறையில் கல்வியில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. இளம் வயதுக் கல்வியும் விளையாட்டும் சேர்ந்து நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கனிஷ்ட பிரிவின் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளைவழங்கி உரைநிகழ்த்திய யாழ்ப்பாண மாவட்ட கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார். இவ் வில்லவிளையாட்டுப் போட்டிகளுக்கு மேற்படி பாடசாலை அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

வலி வடக்கு விளையாட்டு அதிகாரிகளான திருவாளர்கள் அ. முருகையா, கி. கந்தசாமி ஆகியோர் விளையாட்டுப்போட்டிகளை ஆரம்பித்து நடத்தினர்.

கல்லூரி அதிபர் திரு. சுப்பிரமணியம் தலைமை வகித்துப் பேசுகையில், விளையாட்டுக்கள் மூலம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், இருவருக்கிடையே நட்புறவு மனப்பான்மையை ஏற்படுத்தவும் முடியும் என்றார்.

கனிஷ்ட பிரிவின் விளையாட்டுப்போட்டிகளில் ...

வில் 146 புள்ளிகளைப் பெற்ற சினிவாசகம் இல்லம் முதலிடத்தைப் பெற்று இவ்வருட சாம்பியனாகியது. சபாபதி இல்லம் 133 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், முத்துக்குமாரு இல்லம் 96 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

கனிஷ்டபிரிவின் பதில் அதிபர் திரு. வி. நடராசா [illegible]

## வேலையற்றோர் கோரிக்கை

கோப்பாய், திங்கள்

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஒன்று நேற்று முன்தினம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

அரசாங்கசேவை, கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி சபைகள், ஏனைய தனியார் ஸ்தாபனங்கள் முதலியவற்றில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருமாறு சகல அமைச்சுக்களையும் கோருவது.

சிரமதானம், சௌக்கியதானம் போன்று வித்தியாதான முறையையும் பட்டதாரிகள் செயல்படுத்த விரும்புவதால் கல்விஇலாகாவிடம் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் குறைந்தது இருமணிநேரம் வித்தியாதான முறைப்படி கல்வி கற்பிக்க வேலையற்ற பட்டதாரிகளுக்காக அனுமதி கோருதல்.

## உள்ளூர் தயாரிப்பாளர் அதிருப்தி

யாழ்ப்பாணம், செவ்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களின் பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்புவதற்கு நிர்வாகத்தினர் பாரபட்சம் காட்டுகிறார்களாம். உள்ளூர் படத்தயாரிப்பாளர்கள் இதனால் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

இங்கு தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்ட ஒரு மாத காலத்தின் பின்னரே பாடல்களை ஒலிபரப்ப முடியும் என்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் உள்ளூர் படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே சம்பந்தப்பட்டவர்கள் தகவல் பகுதி அமைச்சுடனும், உள்நாட்டமைச்சுடனும் பேச்சுவார்த்தை நடாத்திவருகின்றனர்.

விரைவில் தூது கோஷ்டி ஒன்று உள்நாட்டு அமைச்சரை சந்தித்து உள்ளூர்படங்கள் திரையிடப்படும் போது வெளிநாட்டு தமிழ்ப் படங்கள் குறிப்பிட்ட இடங்களில் திரையிடப்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளும்படி வற்புறுத்தவிருக்கிறது. (அ. நி.)

## மிதந்து வந்த தேக்கு மரங்கள்

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபையின் 10ம் வட்டாரத்தில் மயிலியதனை சுடலைக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் பெறுமதி வாய்ந்த தேக்குமரங்கள் கரைதட்டியுள்ளன. இதனை இவ்வட்டார உறுப்பினர் திரு. செ. ஈஸ்வரலிங்கப் பெருமாள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சுங்கப்பகுதியினர் இம்மாதம் 30ந் திகதி இத்தேக்குமரங்களை ஏலவிற்பனை செய்யவிருப்பதாக அறியப்படுகிறது.

"பொதுமக்கள் பணத்தில்

# ஆஸ்பத்திரி அமைப்பதை அரசாங்கம் ஏன் தடுக்கிறது?"

## சுகாதார அமைச்சருக்கு மகஜர்

அளவெட்டி, திங்கள்

காரைநகருக்கு ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமெனப் பல முறை காரைநகர் பொதுநல சேவா சங்கம் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேட்டி கண்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லையாம்.

சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனா அண்மையில் காரைநகருக்கு விஜயம் செய்த போது, 'யாராவது ஒரு பகுதியை நன்கொடை செய்தால் மிகுதி அரசாங்கம் வழங்கி வைத்தியசாலையைக் கட்டலாம்' எனக் கூறியிருந்தார்.

இதைத் தொடர்ந்து காரைநகர் பொதுநலசேவா சங்கம் தாம் 100 பரப்புக் காணியும், நல்லநீர் உள்ள கிணற்றுடன் 1லட்சம் ரூபா பெறுமதியான கட்டிடமும் கட்டித்தருவதாக அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது அரசாங்க நிதி நிலைமை சரியில்லாதபடியால் ஆஸ்பத்திரி கட்ட முடியாது என அமைச்சு அறிவித்துள்ளதாம்.

இது சம்பந்தமாக சங்கம் அமைச்சருக்கும், யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் ஒரு மகஜர் அனுப்பியுள்ளது.

"1959-ம் ஆண்டு முதல் நாம் ஆஸ்பத்திரி தேவையெனக் கேட்டிருந்தபோது அதை அமைச்சர் ஒரு காரணம் காட்டி ஒத்தி வைத்துக் கொண்டேயிருக்கிறார். இப்படிச் செய்வது காரைநகர் மக்களுக்குக் கவலை தரும் விஷயம்.

அரசாங்கம் 20,000சனத்தொகையுள்ள காரைநகருக்கு வைத்தியசாலை கட்டத் தயங்குவதன் காரணம் என்ன?" என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பொது மக்களின் பணத்தில் ஆஸ்பத்திரி கட்டுவதை ஏன் அரசாங்கம் தடை செய்ய வேண்டும்?" என்றும் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

கட்டைவேலி கிராமசபை

# எல்லைகளைப்பிரிக்க உதவி ஆணையாளர் சம்மதம்

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சியிலுள்ள துன்னாலை தெற்கு தயாநிதி சனசமூக நிலையம், கரவெட்டி மேற்கு கனுவில் சனசமூக நிலையம், கரவெட்டி மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவர்கள், காரியதரிசிகள் அடங்கிய தூது கோஷ்டியொன்று சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை எடுத்து விளக்கும் நோக்குடன் வடபகுதி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். முருகவேலைப் பேட்டிகண்டனர்.

இத்தூதுக் குழுவுக்கு வடமராட்சி சனசமூகநிலையங்களின் சமாஜச் செயலாளர் திரு. சி. செல்லையா தலைமை வகித்தார். இத்தூதுக்குழு உதவி ஆணையாளரிடம் 3 அம்சக்கோரிக்கைகள் அடங்கியமகஜரொன்றைச் சமர்ப்பித்தது.

மிகவும் அக்கறையுடன் இக்கோரிக்கைகளைக் கவனித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கட்டைவேலி கிராமசபைத் தேர்தல் நடைபெறுமுன்பு நிர்ணயக் கமிஷனை நியமித்து வட்டாரங்களைப் பிரித்துத் தருவதாகச் சம்மதமளித்தள்ளார். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளும் பிரதிநிதித்துவம் பெறத் தான் உழைத்து வருவதாகவும் அவர் இக்குழுவினரிடம் தெரிவித்தார்.

தெல்லிப்பழைப் பட்டினசபை அலுவலகத்தில் இப்பேட்டி நடைபெற்றது.

## வீடு தீக்கிரை

### 7 மாதக்குழந்தை காப்பாற்றப்பட்டது

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு சிலாவத்தையைச்சேர்ந்த சுப்பையா வீரபத்திரன் என்பவருடைய வீடும்பொருட்களும் நேற்று நண்பகல் தீக்கிரையாகியது. காலையில் வீரபத்திரன் வேலைக்குச் சென்றிருந்ததாகவும் மனைவி பிள்ளைகளை வீட்டில்விட்டு முல்லைத்தீவுக்குச் சென்றிருந்ததாகவும் இவர்கள் இருவரும் வீடு திரும்புவதற்கிடையில் வீடு சாம்பலாகிக்கிடந்ததாம். தெய்வாதீனமாக ஏணையில் தூங்கிக்கொண்டிருந்த ஏழு மாதக் குழந்தை அயலவரால் காப்பாற்றப்பட்டதாம். இதுபற்றி முல்லைத்தீவுப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

கோப்பாய், திங்.

கோப்பாய் நாவலடி சனசமூகநிலைய 15-வது ஆண்டு விழா வலி—கிழக்கு காரியாதிகாரி திரு. எஸ். கந்தப்பிள்ளைதலைமையில் கூடிய போது பின்வருவோர் நிலையத்தின் நடப்புவருட புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, தலைவர் திரு ஏ. சி. செல்வராசா, உபதலைவர்கள் திரு. சி. தனபாலசிங்கம், திரு. எஸ். சோமசுந்தரம், தனாதிகாரி திரு. எஸ். ஜயேந்திரன், காரியதரிசி கே. சதானந்தன், உபகாரியதரிசி திரு எஸ். துரைராசசிங்கம்

ஏழுபேர்கொண்ட நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

கோப்பாய், திங்கள்

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம். பி., தலைவர். திரு. க. சதானந்தன், செயலாளர் க. வைரவபிள்ளை, பொருளாளர் செல்வி ஆர். குமாரசாமி.

நான்கு பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## புதிய வாசிகசாலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஏழாலை மேற்கு சாடிவடி என்னுமிடத்திலுள்ள சரஸ்வதி இளைஞர் முன்னணியினரால் புதிய வாசிகசாலை அமைப்பட்டுள்ளது. ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு வாசிகசாலையைத் திறந்துவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

எழுவைதீவுக் கிராம சபைத் தலைவரால் 1968-ம் ஆண்டு யூன் மாதம் 12-ந் திகதி (12-6-68) காலை 10-30 மணிவரை கடற்கரை வீதி, முதலாங் குறுக்குத் தெரு மற்றும் துறைமுகப்பாலத்தை மரத்தால் நீட்டியமைத்தல், கி. ச. சந்தோர்க் கிணற்றைக் கட்டுதல் ஆகிய வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விகள் கூட்டாக எல்லா வேலைகளுக்குமோ அல்லது தனித்தனி வேலைக்கோ கேட்கலாம். கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திரப்பணமாக ரூபாய் 10/-ம் கேள்விப் பிணைப் பணமாக ரூபாய் 100/-ம் செலுத்தியதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வீதி வேலைகளுக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு உரிய நேரத்திற்கு முன் கிடைக்கக் கூடியதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கும் எமக்கும் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்க வேண்டும். மற்றைய விபரங்கள் கிராம சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

[ஒப்பம்]
வை. சி. வைத்தியலிங்கம்
தலைவர்

கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு.
25-5-68. 694


## இடமாற்றம்

உடுப்பிட்டி, திங். மந்திகை அரசினர் வைத்தியசாலையில் டி. எம். ஓவாகக் கடமையாற்றிய டாக்டர் பொன்னுச்சாமி அடுத்தமாதம் முதல் திருக்கோணமலை ஆஸ்பத்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். டாக்டர் எம். தியாகராசா மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு புதிய டி. எம். ஓவாக நியமிக்கப்பட்டுள்ளார்.


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?


வலி-வடக்கு விளையாட்டுச்சங்க

## கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

உடுவில், திங்கள் வலி. வடக்கு விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டிமுடிவுகள் பின்வருமாறு:-

இணுவில் இந்துவிளையாட்டுக்கழகத்திற்கும் 'அண்ணா' விளையாட்டுக்கழக முதலாம் பிரிவுக்குமிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் இணுவில் இந்து 2—1 புள்ளிகளால் அண்ணா கோஷ்டியை தோற்கடித்தது.

இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக இரண்டாம் பிரிவுக்கும் ஏழாலை மேற்கு விளையாட்டுக் கழகத்துக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் 2-1 புள்ளுகளால் ஏழாலைகோஷ்டி வெற்றியீட்டியது.

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளுக்கும் முறையே திருவாளர்கள் எஸ். கனகசபை, கே. சின்னராசா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

சுன்னாகம் இளந்தென்றல் மன்றமும் உடுவில் கிழக்கு 'லெவின் கோசஸ்' விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட ஆட்டத்தில் 2-0 புள்ளிகளால் இளந்தென்றல் மன்றம் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் இளந்தென்றல் மன்றம் 'லவ் செற்' அடித்தது குறிப்பிடத்தது.

கட்டுவன் காந்திருபன் கோஷ்டியும், சுரம்பன் உதயசூரியன் கோஷ்டியும் கலந்துகொண்ட மற்றொரு போட்டியில் இரு கோஷ்டிகளும் முறையே 2-1 புள்ளிகளை பெற்றுக்கொண்டன.

கலைவாணி விளையாட்டுக் கழகத்திற்கும் சுரம்பன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில்நடைபெற்ற ஒரு போட்டியில் உதயசூரியன் கோஷ்டி 2-1 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் உடுவில் புளொட்ஸ் விளையாட்டுக்கழகமும் கலந்துகொள்ளவிருந்த போட்டிக்கு புளொட்ஸ் கழகம் சமூகமளிக்கத் தவறியமையால் இணுவில் இந்துக்கோஷ்டிக்கு வெற்றியளிக்கப்பட்டது.

சுன்னாகம் பட்டினசபை விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. ஏ. முருகையா மத்தியஸ்தம் வகித்தார்.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ். காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை விளையாட்டுப் போட்டியும் ஸ்தாபகர் தினமும் சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்றன. இவ்விழாவுக்கும் விளையாட்டுப் போட்டிக்கும் வித்தியாலய அதிபர் திரு. மு. வைத்திலிங்கம் தலைமைவகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளின் பயனாக ஒழுக்கம் கட்டுப்பாடு முதலிய பண்புகளை வளர்க்க முடியுமென்றும், விளையாட்டுப் போட்டிகளில் தோல்வி மனப்பான்மையை விடுத்து மற்றவர்களைப் பாராட்டி தான் முன்னேற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார் வட்டாரக் கல்விபதிகாரி திரு. சபாபதி பரிசில்கள் வழங்கினார். (நி)


சில தினங்களுக்குமட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன்
நடிக்கும்
மனோகரா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M
BertSotlar, Olivera Markoviv
in
THE BRAVE DIE BUT ONCE
(Adults)

MANOHARA
JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
Dean Martin, Anita Exberg, Frank Sinatra
in
Four For Texas


## வரி விளம்பரம்


### தேவை

தையல்காரர்

எமது தையல் கடைக்குத் தையற்காரர்கள் தேவை. உடன் வரவும். —ரவி தையல்நிலையம், நெல்லியடி சந்தி, கரவெட்டி. 1310

### விற்பனைக்கு

கார்

நல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ 3306 மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. காலையில் D. T. நைகில் வேம்படி றோட், மெதடிஸ் தலைமைக் காரியாலயத்திலும் மாலையில் வழலாய் அச்சுவேலியிலும் பார்வையிடலாம். 1309


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 28-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 தேவப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்வி ஒலிபரப்பு, 5-15 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 வீணை — லீலாவதி இரத்தினசிங்கம், 6-45 பாவலம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 7-45 தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்தஇசை.

## கி. மு. சங்க வருடாந்த விழா

யாழ்ப்பாணம், செவ். காரைநகர் தோப்புக்காடு கிராம முன்னேற்றச் சங்க வருடாந்த விழா சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தீவுப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ஏ. வி. ராஜகுலசிங்கம் இவ் விழாவுக்கு தலைமை தாங்கினார்.

அடுத்த ஆண்டுக்குரிய நிர்வாகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் க. வீரகத்திப்பிள்ளை, காரியதரிசி க. குமரவேல் தனாதிகாரி மு. நடேசரத்தினம். [நி]


### நன்றி அறிவித்தல்

எமது புத்திரன் பத்மநாதனுக்கும் கீரிமலை திரு. ராமஜயமின் புத்திரி சிதலட்சுமிக்கும் கிலக வருஷம் வைகாசி மாதம் 9-ம் நாள் (22-5-68) காலை 9-38 மணிக்கும் 10-38 மணிக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் சிறப்புற திருமணம் நடந்தேறியது. சமூகமளித்த சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. சோ. சண்முகரத்தினக் குருக்களும் பாரியாரும். "குவபவனம்", நவாலி வடக்கு, மானிப்பாய். 1318

### கல்வி

சிங்களம்:

சிங்களத்தில் முதலாந்தர ஆசிரிய தராதரப் பத்திரத்தையும், சிங்களத்தில் லண்டன் பட்டதாரிப் பத்திரத்தையும் பெற்ற மாத்தளை தெய்வயானையம்மாளும், மற்றும் சிறந்த ஆசிரியர்களாலும் சிங்களப் பாடம் காலை 6 தொடக்கம் மாலை 8 வரைக்கும் தனித்தனியே கற்பிக்கப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1304

தையல்:

ஆரம்பத்திலிருந்து இயந்திரப் பூவேலை செய்தல், சிற்பியினுல் உருவம் செய்தல், விஞ்ஞான முறையில் வெட்டுதல் வரை, தினசரியும்; விசேட வகுப்புகள் விடுமுறை, போயா, போயாவுக்கு முதல் நாட்களிலும் கற்பிக்கப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1308

மார்கழி க. பொ. த. (சாதாரண) வர்த்தக தராதரப்பத்திரப் பரீட்சைகளுக்காக சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகமும் நிதியும், வர்த்தக எண்கணிதம், பொருளாதாரம் முதலிய பாடங்கள் ஆறுமாத பிரத்தியேக வகுப்புக்கள் ஆனி தொடக்கம் கற்பிக்கப்படும். விடுதி வசதியுண்டு. உடன் விண்ணப்பிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1305

வகுப்புக்கள்

கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் [சாதாரண — உயர்தரம்] வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் காலை/மாலை நடாத்தப்படுகின்றன.— யாழ். டியூட்டோரியல் கல்லூரி, நெல்லியடி சந்தி, கரவெட்டி. 1311


இன்று

## கொக்குவில் கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், செவ். கொக்குவில் கிராமசபைக்கான புதிய தேர்தல் இன்று நடைபெறவிருக்கிறது.


சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' — இதற்கு நிகரில் சொல்லப்போகும் கதை

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த



முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்

பெற்றால்தான் பிள்ளையா?

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு

பூஜைக்கு - அபிஷேகத்துக்கு
தேவையான
பொருட்கள்
கிடைக்குமிடம்
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலையவீதி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துப்புரவு......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அடையவேண்டியுள்ளதென்றும், முக்கியமாக நாம் இன்று பகைவில் ஜிழுவில் திருப்பதிலும், தியேட்டர்களில் புகைபிடியாதிருப்பதையும், போக்குவரத்து விதிகளுக்கு அமைந்து வீதிகளில் நடமாடவேண்டியதையும் விசேஷமாக கவனிக்கவேண்டுமென்றூர்.

### மூன்றுமுக்கிய அம்சங்கள்

திரு. கு. நேசையா பேசுகையில் பின்வரும் மூன்று விஷயங்களையும் உள்ளூராட்சி அமைச்சர் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றூர்.

O யாழ்ப்பாணத்தை ச் சிறந்த நகரமாக விஸ்தரிக்க ஒரு நகர அமைப்புத் திட்டம் அமைக்கவேண்டும்.

O தமிழ்மன்னரின் அரண்மனையான சங்கிலித்தோப்பு மண்டபம் இன்று இடிந்து செல்வதால் அதை மீண்டும் புனருத்தாரணம் செய்ய யாழ் மாநகரசபையிடம் அல்லது புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவிடம் கையளித்து அதை ஒரு கலைப் பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டும்.

• அரசாங்க அதிபரின் வாசஸ்தலமான 'பழைய பூங்காவின் ஒரு பகுதியை மாநகரசபையிடம் கையளித்து அதில் ஒரு பிரமாண்டமான மக்கள்பூங்கா அமைக்க ஒழுங்கு செய்ய வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரசபை தற்காலிக ஆணையாளரான திரு வே. தங்கவேலு நன்றி தெரிவித்துப் பேசினூர்.

(கா. நி)

## இன்னும் காணவில்லை

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலைத் துறைமுக கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையாளராக கடமையாற்றிய சபாரத்தினம் நேற்றிரவு தற்செயலாக கடலில் மூழ்கிவிட்டார்.

சரக்குக் கப்பலிலிருந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பல பொருட்களை வத்தையில் ஏற்றிக் கொண்டு செல்லும்போதே கடலில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இவர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடற்படையினரும், உறவினரும் இவரைத் தேடுவதில் எடுத்த முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை.

## குடியேற்றவாசிகளுக்கு வசதி

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் தெற்கு மண்டான் குடியேற்றத்திட்டத்தில் அரசாங்கம் புதிய உப தபால் கந்தோரை நிறுவியுள்ளது. மண்டான் குடியேற்றவாசிகள் இதுவரை காலமும் தபால் சேவை வசதிக் குறைவுடன் கஷ்டமனுபவித்து வந்ததைத் தொடர்ந்து உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியினால்இவ் உப தபாற் கந்தோர் அமைக்கப்பட்டுள்ளது.

மண்டான் உப தபாற்கந்தோர் அதிபராகத் திரு. எஸ். சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். விரைவில் இவ் உப தபாற் கந்தோர் செயற்பட ஆரம்பிக்கும்.

தொழில் அதிபர்களின்

## வேலைநிறுத்தம் நீடிப்பு

கொழும்பு, திங்.

தொழிற்சாலைத்தோர் அதிபர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பித்து இன்றுடன் 3 நாட்கள்முடிவடைகின்றன. இவர்களது கோரிக்கைகள்பற்றி பரிசிலனை செய்வதாகவும், வேலைக்கு உடனடியாகத் திரும்புமாறும்தொழில்பகுதி கொமிஷனர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவரது வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு மாவட்ட சபையிலும் அந்தந்த மாவட்ட உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் அங்கம் வகிப்பார்களென்றும் அறியப்படுகிறது. ஒவ்வொரு மாவட்ட சபையிலும் ஆகக் குறைந்தது பதினைந்து பேர்கள் அங்கம் வகிப்பார்களென்றும் அறியப்படுகிறது.

மாவட்டசபை சம்பந்தமாக ஜூன் மாத முற்பகுதியில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வெள்ளை அறிக்கை பெரும்பாலும் தயாராகி விட்டதாகத் தெரிகிறது.

## மாவட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அடங்கி நடக்கவேண்டியதே ஜனநாயக நீதியாகும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாம் மௌனமாகவே இருக்கவேண்டும். இருந்தபோதிலும் மாவட்ட சபை பற்றிச் சில அரசியல் தலைவர்கள் தப்பான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் பரப்பி, இதுபற்றி ஒரே மேடையில் விவாதிக்க எம்மை வரும்படியும் அழைக்கிருர்கள்.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், பிரதமர் டட்லி சேனநாயகாவும் பேச்சுவார்த்தை நடத்தினூர்கள். இப்பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளில் மாவட்டசபையும் ஒன்று.

இப்பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் தேசிய அரசாங்கத்தில் இன்று அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு கூறப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் அமைக்க ஒத்துழைப்புக் கொடுத்தவர்களில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் ஒருவராவர். ஆனூல் இன்று அவர் இதுபற்றி விவாதிக்க அழைப்பது விந்தையாக இருக்கிறது. 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி இதனை ஏற்றுக்கொண்டவர் இன்று ஏன் எதிர்த்துப் பிரசாரம் செய்கின்ருர்?

### 'பிளவு கூடாது'

எமது மத்தியில் எந்த வேலையிலும் பிளவு ஏற்படக்கூடாது' இலங்கையின் இரண்டாந்தரப் பிரஜைகளாக தமிழர்வாழக்கூடாது. விரைவில் நாம் இலங்கையில் முதலாம்தரப் பிரஜைகளாக மாறுவோம். அந்த நாள் வெகுதூரத்திலில்லை.

எமக்குப் பிரதமர் கொடுத்தவாக்கை ஒருபோதும் நிராகரிக்கமாட்டார். இன்றைய அரசியல் நெருக்கடியில் வாக்கை மாற்றவும் நாம் இடம் கொடுக்கமாட்டோம்.

மாவட்டசபை வர நெருங்கும்வேளையில் சில தலைவர்கள் மக்களைப் பிழையான வழிக்குக் கொண்டு செல்வதற்கு மக்களே சரியான தீர்ப்புக் கொடுக்கவேண்டுமென்றும் அமைச்சர் திருச்செல்வம் இங்கு குறிப்பிட்டார்... (கா. நி)

# சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்கள் வேலைநீக்கம்

### "மனேஜரின் உத்தரவு சட்டபூர்வமானது"

யாழ்ப்பாணம், செவ்.

சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சிலரை வேலையிலிருந்து நிறுத்திவைத்தது சம்பந்தமாக அவர்கள் வடமாநில வித்தியாதிபதிக்கு முறைப்பாடு செய்ததன் விளைவாக இவ்வருட முற்பகுதியில் நடைபெற்றவிசாரணையின்போது வித்தியாதிபதி ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை நீக்க அறிக்கை சட்டபூர்வமானதல்ல என்றும் அப்படி அறிக்கை கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரி கல்லூரிச் சொந்தக்காரரேயன்றி கல்லூரி மனேஜரல்லவென்றும் தீர்ப்பளித்தார்

இத் தீர்ப்பை எதிர்த்து கல்லூரி நிர்வாகிகள் கல்விமா அதிகாரிக்கு விண்ணப்பித்தனர் அவர் இவ்விஷயத்தை அட்டர்னி ஜெனரலின் ஆலோசனைக்கு ஒப்படைத்தார்.

அட்டர்னி ஜெனரல்மனேஜரின் வேலைநீக்க அறிக்கை சட்டபூர்வமானதே எனத் தீர்ப்பளித்தார். இதுபற்றிய விசாரணை விரைவில் நடைபெறுமென வடமாநில வித்தியாதிபதி ஆசிரியர்களுக்கும் மனேஜருக்கும் அறிவித்துள்ளார்.

வித்தியாதிபதியின் முடிவு கிடைக்கும்வரை இந்த ஆசிரியர்களை 1968 ஜனவரியிலிருந்து கட்டாய லீவில் செல்லுமாறு மனேஜர் உத்தரவிட்டிருந்தார். அவர்களுக்கு 1968-ம் ஆண்டு ஜனவரி பெப்ரவரிமாத முழுச் சம்பளமும் கொடுக்கப் பட்டது. அதற்குப்பின் அவர்களுடைய சம்பளம் நிறுத்தப்பட்டது.

(கா. நி)

## மலேஸியாவுக்கு இலங்கை தூதுவர்

கொழும்பு, திங்கள்

காபூலில் இலங்கைத்தூதுவராக இருக்கும் திரு. ஏ. சி. எல். றட்வத்த மலேஷியாவில் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். மலேஸியாவில் இலங்கைத் தூதுவராக இருந்த ஜனூப் மஹ்றூவ் காலமானதைத் தொடர்ந்து திரு. ஏ. சி. எல். றட்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்

## கட்டியிருந்த வள்ளத்தை காணவில்லை

அளவெட்டி, திங்கள்

காங்கேசன்துறை துறைமுகத்தில்கட்டியிருந்தசுமார் இருபத்திரண்டாயிரம் ருபா பெறுமதியானதெனக் கருதப்படும் யந்திர வள்ளத்தைக் காணவில்லையாம்.

கண்டுபிடிப்பதில் காங்கேசன்துறைப் பொலிசாரின் உதவியுடன் காரைநகர் கடற்படையைச் சேர்ந்த யந்திரப்படகுகள் ஈடுபட்டுள்ளன.

இதையடுத்து திருகோணமலை ஆகாயப்படையினரும் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த ஒருவரின் 'வெல்லம்' என்னும் யந்திரவள்ளம் காங்கேசன் துறைமுகத்தில் சாமான்கள் இறக்குவதற்கு வள்ளங்களுக்கு உதவியாக சேவையில் ஈடுபட்டிருந்ததாகவும் கடந்தஇரவு கரையில் கட்டப்பட்டிருந்ததாகவும், அதைக் களவாடிச் சென்றுவிட்டார்களோ கட்டை அவிழ்ந்து விட்டார்களோ என்று தெரியவில்லையென்றும் சொல்லப்படுகின்றது.

## மாநகரசபை ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டம் இது கையளிக்கப்பட்டதும், இனியாவது அவர்கள் இதனை நேர்மையாக நடாத்த வேண்டும்'.

இவ்வாறு குடிநல சுகாதார வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் தெரிவித்தார்.

மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. எம். முருகவேள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் திருச்செல்வம் யாழ்ப்பாணம் மாநகர சபை பற்றி மேலும் தெரிவித்ததாவது:--

யாழ்ப்பாணத்திற்கு ஒரு நகர அமைப்புத் திட்டம் அவசியமென திரு. கு. நேசையா இங்கு தெரிவித்தார். இது மிக முக்கியமான விஷயமுங்கூட. இதற்குமுதலாவதாக இங்குள்ள பல பிரச்னைகளிலும் குழாய் நீர் விநியோகத் திட்டம் மிக அவசியமாகும். தண்ணீர் மின்சார விநியோகங்களை சரிவர இங்கு நிவர்த்தி செய்த பின்னர் இத்திட்டம் இங்கு உருவாக்கப்படும். இதற்கான திட்டம் ஒன்றையும் நாம் இப்போ வகுத்துள்ளோம்.

இத்திட்டம் உருவாக்கப்படும்போது மண்டைதீவு யாழ்ப்பாணத்தின் ஒரு "புறநகராக" உருவாக்கப்படும். இந்த விஸ்தரிப்பு முடிந்த பின்னர் நகர அமைப்புத் திட்டம் அமுலுக்கு வரும். அதன் பின்னர் யாழ்ப்பாணம் ஒரு சிறந்த நகரமாக மிளிரும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

யாழ்ப்பாண மாநகர சபையை தற்போது தற்காலிகமாக ஆட்சி செலுத்திவரும் ஆணையாளரின் ஆட்சி மீண்டும் மக்களிடம் கையளிக்கும் போது யாழ்ப்பாணம் மற்றைய மாநகர சபைகளிலும் பார்க்க முன்னோடியானதொன்ருக இருப்பதற்கு இங்கு வாழும் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். [கா. நி]

## நேருசமாதான...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மானபிறகு வழங்கப்பட்டுள்ளது.

இப்பரிசை ஏற்றுக்கொண்டு அதற்கு நன்றி தெரிவித்து திருமதி இந்திரா இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் எழுதியிருக்கிருர்.

அடுத்தவருடம் நடைபெறும் ஒரு விசேஷ நிகழ்ச்சியின்போது திருமதி இந்திரா இந்தியாவுக்கு வந்து பரிசைப்பெற்றுக்கொள்வார். பரிசைத் தாம் ஏற்றுக்கொள்ள முடிவு செய்ததற்கான காரணத்தைப் பிறகு தெரிவிப்பாராம். அந்நிய செலாவணியாக மாற்றக்கூடிய ஒரு லட்சம் ருபாயும் பாராட்டுப்பத்திரங்களும் பரிசாக வழங்கப்படும். 1962-ம் ஆண்டில் இந்தப் பரிசு முதல்தடவையாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டுக்கு வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

விமலா ஸ்ரோஸ் உரிமையாளர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களின் அருமைப் புதல்வி இந்துமதி நேற்று 27-5-58 காலமானூர். அன்னூரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று [28-5-68] காலை 8 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: மு. பொ. சின்னராசா, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 1547

# ஐயாறன் எழுதுவது

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் செய்யப்பட்டிருந்ததாயும் தெரிவிக்கிருர்.

பாபா அவர்கள் சித்து விளையாட்டுக்கள் எதுவும் செய்யவில்லையாம். "மக்கள் தான் நமது எஜமானர்கள் அவர்களுக்குத் தொண்டு செய்வதே நமது கடமை. உலகத்துக்குப்பணி புரிவதே நமக்குரிய வேலை. அதுவே இன்பத்துக்கும், சாந்திக்கும் வழி" என்று பாபா அவர்கள் உபதேசித்தார்களாம்.

இந்த உபதேசப்படிஎல்லாரும் நடக்கமுடியுமா? நடப்பார்களா? சுயநலமும் ஆசையும் அதிகமிருக்கையில் இது சாத்தியமா? என்ற கேள்விகள் எழலாம். ஆனூல் இன்பமும் சாந்தியும் ஏற்பட இதைத்தவிர வேறு என்ன வழி?

ஃ ஃ ஃ

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தார் வருகிற ஜூன் மாதம் 1ம், 2-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், தொடர்ந்து மூன்றாவது வருடமாக சேக்கிழார் விழா நடத்துகின்றார்கள் விழா நிகழ்ச்சி நிரலைக்கண்டேன். இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழகத்திலிருந்து "திருக்கோயில்" இதழாசிரியர் சித்தாந்தப் புலவர்மணி புலவர் முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல். வருகிருராம். இங்கு பல கல்லூரி மாணவ மாணவிகள் திருமுறை ஓதுவதுடன், ஊர்வலம், பஜனை, சொற்பொழிவுகள், புராண படனம், கருத்தரங்கு, இசையரங்கு, மகேச்வரபூசை முதலியன நடப்பதாயும் பெரியபுராணப் பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குத்தங்கப் பதக்கப் பரிசுகள் வழங்கப்படுமென்றும் தெரிகிறது. எந்த நோக்கத்துடன் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை ஆக்கித்தந்தாரோ, அந்நோக்கம் கைகூட இந்தவிழா ஓரளவாவது உதவவேண்டும்.

ஃ ஃ ஃ

நாயன்மார்களில் சிலர் சிவனடியார்களுக்கு திருவோடு, கௌபீனம் முதலியன அளித்ததாக பெரிய புராணம் கூறுகிறது. உடுப்பிட்டியைச்சேர்ந்த மலாயன் பென்ஷனரான காங்கேசன் எனும் அடியார், சென்ற 20 வருடகாலத்துக்குமேலாக முறைப்படி திருநீறு தயாரித்து உபகரிக்கும் சிவ கைங்கரியத்தைச் செய்துவருவதைக் கேட்டதும், எனக்கு நாயன்மார்கள் தொண்டுதான் நினைப்புவருகிறது. இன்றும் அப்படிப்பட்டவர்களும் நம்மிடை இருக்கத்தான்செய்கிருர்கள் அவர்கள் வாழ்க!

ஃ ஃ ஃ

பூச இனியது நீறு புண்
ணியமாவது நீறு
பேச இனியது நீறு
பெருந்தவத்தோர்களுக்
கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு
அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு இரு
ஆலவாயான் திருநீறே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org